# 17 இறைவனும் ஆன்மாவும்

உலகத்துப் பொருள்களெல்லாம் மூன்று பிரிவினுள் அடங்கும். அறிவிக்காமலே அறியும்பொருள். அறிவிக்காவிடில் அறியமாட்டாத பொருள். அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் என்பனவே அப்பிரிவுகள். இம் மூன்றையும் சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்று கூறுகிறது. இம் மூன்றும் என்றுமுள்ள பொருள்கள். இவை வெவ்வேறு பிரிவைச் சேர்ந்த தனிப்பொருள்களேயாயினும் ஒற்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவே. பதி வியாபகம்: பசு வியாப்பியம்: பாசம் வியாப்தி, இவ்வகையில் இவை தொடர்புடையன. (பாசம்-கட்டுவது. பசு-கட்டுண்டிருப்பது)

## பதி

கடவுளுக்கு இருவித நிலைகள் சொல்லப்படுகின்றன. ஒன்று சொரூபலக்கணம் என்னும் சிறப்பியல்பு. இந்நிலையிலிருக்கும்போது கடவுளுக்குப் பெயர். குணம், குறி எதுவுமில்லை. திரிகரணங்களுக்கும் எட்டாத இந்நிலையிலுள்ள



இறைவனுக்குப் பரமசிவன் என்று பெயர் கூறப்படும். இவ்வுயர்ந்த நிலையிலுள்ள இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்புரிய வேண்டி நிலையிலுள்ள கடவுளரை அதிட்டித்து நின்று அவர்கள் மூலமாக ஐந்தொழில் செய்தருளுகின்றார். இதுவே இரண்டாவது நிலை. இது தடதலக்கணம் எனப்படும் பொது இயல்பு. இந்த நிலையில் இச்சாசக்தி கிரியாசக்தி, ஞானசக்தி என்பவற்றின் தொடர்பினால் அருட்டிருமேனிகளாகியஅருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி, உருவத் திருமேனி என்பன தோன்றுகின்றன. சிவமும் சக்தியும் மணியும் ஒளியும் போலவும், நகமும் சதையும் போலவும் பிரிப்பின்றியிருப்பன. இவற்றினை இறைவன் இறைவி, நாயகன், நாயகி என்று கூறுவது ஒரு உபசாரமே.

தடத்தநிலையில் சிவபிரான் அளவிலாற்றலுடைமை இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், இயற்கையுணர்வினாதல், தன்வயத்தனாதல், முற்றுமுணர்தல், பேரருளுடைமை, தூயவுடம்பினாதல், வரம்பிலின்பமுடைமை என்னும் எட்டுக் கணங்களுடையவராகிறார். ஆன்மாக்களின் துன்பத்தை நீக்கி இன்பமளிக்கவே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்கள் செய்யப்படுகின்றன. இறைவன் சந்நிதியிலே சங்கற்பமாத்திரத்தால் இவை நிகழுவன. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐந்தும் ஐந்தொழில் புரியும் திருமேனிகள்.

## பசு



கடவுள் போலவே ஆன்மாக்களும் அநாதியானவை. எண்ணிக்கையற்றவை. பாசங்களோடு இவை தொடர்புபட்டிருக்குந் தன்மையால் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படும். மூவகையான்மாவும் கொடிய ஆணவத்தோடு அநாதியாகவே கட்டுண்டு வருந்துவன. ஆணவத்தின் வலிமையைக் கெடுத்தற்காக இறைவன் இந்த ஆன்மாக்களுக்கு மாயையினாலாகிய தனு கரண புவன போகங்களைக் கொடுக்க, அவற்றிடையே இவை வினைசெய்யும். வினை செய்தலாலும் திருவருட் சக்தி பதிதலினாலும் ஆணவம் ஆன்மாக்கள் இறைவனைச் சேர்ந்து பேரானந்தம் பெறும். ஆன்மா பதியைச் சாரும்போது சத்தாயும், பாசங்களைச்சாரும் போது அசத்தாயுமிருப்பதால் 'சதசத்து' எனப்படும்.

## பாசம்

பாசம் ஆன்மாக்களைப் பந்தித்திருக்கும். பாசங்கள் ஆணவம், கன்மம், மாயை என மூன்றாகும். ஆன்மாக்களின் சுகதுக்கங்களுக்கு இவை முறையே நிமித்தகாரணம், முதற்காரணம், துணைக்காரணமாயிருப்பவை. ஆணவத்தினியல்பு ஆன்மாவின் அறிவை மறைத்து மயக்குதல், பொருள்களை மறைப்பதோடு தன்னையும் மறைத்துக் கொள்ளும் அளவு ஆற்றலுடையது. ஞானிகளிடத்தில் இது வலியிழந்து கிடக்கும். சீவன் முத்தரது உடல் நீங்கும்போது அவர்களை விட்டு நீங்கும்.

கன்மமானது நல்வினை, தீவினை என இரண்டாகி மனம் வாக்குக் காயங்களினால் செய்யப்படும். உயிரோடு தொடர்புடைய வினை பசுவினை என்றும் சிவத்தோடு தொடர்புடைய வினை சிவவினையென்றும் அவை தனித்தனி இரண்டாகும். பற்றற்ற வினையென்பது பயன் கருதாது செய்யும் வினை. இது நல்வினையிலும் பன் மடங்கு சிறந்தது.

நல்வினையாலாவது புண்ணியம், தீவினையாலாவது பாவம். புண்ணியத்தின் பலன் இன்பம். பாவத்தின் பலன் துன்பம். இன்ப துன்பங்களை அநுபவித்தற்கு ஆன்மா பிறத்தல் வேண்டும். பற்றற்ற வினைக்கு மோட்சமே பலனாம். அவ்வினை செய்த ஆன்மா பிறவி எடாது. ஆன்மாக்கள் செய்த வினைகளின் கூட்டம் சஞ்சிதம் எனப்படும். (சஞ்சிதம் - சேர்க்கப்பட்டது) இவ்வினைகள் பல பிறவிகளில் சிறிது சிறிதாக அனுபவிக்கப்படுகின்றன. அனுபவிக்கப்படும்போது பிராரத்தம் என்று பெயர் பெறும். வினைப் பயனை அனுபவிக்கும் போது ஆன்மா புதிய வினையையும் செய்யும். அது ஆகாமியம் என்று பெயர் பெறும். அவற்றின் பயனை அனுபவிக்க ஆன்மா மீண்டும் பிறக்க வேண்டும். பிறவாமை வேண்டிய ஆன்மா இறைவழிபாட்டில் நின்று பற்றற்று வினை செய்தல் வேண்டும்.

மாயையானது 36 தத்துவங்களும், 60 தத்துவிகங்களும் தோன்றுவதற்கும் ஒடுங்குதற்கும் இடமாயுள்ள மூலப் பொருள். முப்பத்தாறு தத்துவங்களுள் கீழுள்ளவை. 24 ஆன்ம தத்துவங்கள், நடுவிலுள்ளவை 7 வித்தியாதத்துவங்கள், மேலுள்ள 5 சிவ தத்துவங்கள். இம்மூன்று நிலையிலும் மாயை முறையே அசுத்த சுத்த மாயை,பிரகிருதி மாயை என மூன்றாகும். மாயையிலிருந்து ஆன்மாக்களுக்கு அவற்றின் வினைக்கேற்ப தனு கரண புவன போகங்கள் உண்டாக்கப்படுகின்றன.

**மறுபிறப்பு:** அளவற்ற ஆன்மாக்கள் பிறந்து இறந்து உழன்று கொண்டே இருக்கின்றன. ''புல்லாகிப் பூடாய் .. எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'' என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியவாறு, முத்தியடையும் வரையிலும் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றன. ஒவ்வோர் ஆன்மாவும் அது செய்த வினைக்கேற்றவாறு முன்பெற்ற பிறப்பை அல்லது அதிலும் உயர்ந்த, தாழ்ந்த பிறப்புக்களை மானிடம் பெறுகிறது. இவ்வாறு மீண்டும் பிறப்பது முன்னுடலை விட்டவுடனும் நிகழலாம். காலாந்திரத்திலும் நிகழலாம்.

முத்தியடைந்த ஆன்மாக்களும் முத்தியடைவதற்கு ஏதுவாகி மௌன சமாதியடைந்த ஆன்மாக்களும் மௌன சமாதிக்கு முந்திய நிலையாகிய கேட்டல் சிந்தித்தல், தெளிதலாகிய ஞானநிலையில் நின்றவர்களுமாகிய மூவகையான்மாக்களுமே மீண்டும் பிறவாத ஆன்மாக்கள், மலங்களினின்றும் நீங்கி முத்தியடைய விரும்பும் ஆன்மா, அதற்கேற்ற சைவசாதனங்களைக் கைக்கொண்டொழுகுதல் வேண்டுமென்று சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

**முத்தி:** முத்தியென்பது நீக்கம் எனப் பொருள்படும். நீக்கம் என்பது துக்க நிவர்த்தியை, பாசம் துக்க ரூபமாகையால் பாச நீக்கத்திற் கிடைப்பது சகப்பேறாகும். சிவனொடு அத்துவிதத் படுதலாலுண்டாகும் ஆனந்தம் சிவானந்தமாகும். இவ்வானந்தம் இடையில் நீங்கப்பெறாதது. அதனால் இது சதானந்தமென்று கூறப்படும். சதானந்த வடிவமாகிய இம் முத்தியை ''இரும்புண்ட நீரிற் றிரும் பாதவீடு'' என்று ஆன்றோர் போற்றினர்.

முத்தி நிலையில் முப்பொருள் இரண்டற்று நிற்றலுக்குச் சித்தாந்த சாத்திரங்கள் 'அப்பினிடை உப்பு' என்பதை எடுத்துக் காட்டுகின்றன. ஒருபடி அப்பம் (நீர்) ஒருபடி உப்பும் கலந்தபோது இரண்டுபடியாகாமல் ஒருபடியேயாயினவாறு ஆன்மாவும் சிவமும் கலந்து இரண்டற்று நிற்கும். உப்பு தன்னுருவம் மாறி நீருருவம் அடைந்தவாறே ஆன்மாவும் சிவரூபம் பெற்றுவிடும். உப்பு தன்னுள் உப்பை அடக்கியிருப்பது போலச் சிவம் ஆன்மாவை முத்தியில் அடக்கி நிற்கும். அன்றியும் இவ்வுப்பு-நீர் கலப்பினால் ஒன்றாகியும் பொருளுண்மையால் இரண்டாகியும் நின்றவாறு சிவனும் சீவனும் பிரிப்பின்றி ஒன்றாகியும் இரண்டாகியும் நிற்கும்.

பாலும் நீருங் கலந்தபோது நீர் தோன்றாது நின்ற தன்மை போல, உயிர் சிவனுடன் கூடியபோது சிவத்தினின்று தனித்து நில்லாது. மேலும்பால் என்னுஞ் சொல் நீர் என்னுஞ் சொல்லுடன் சேர்ந்த போது பானீர் என்று ஒரு சொன்னீருமைய தாய் நின்றவாறே சிவனும் சீவனும் பிரிப்பின்றி ஒன்றென நிற்கும். பாலிற் சேர்ந்த நீரானது பாலினது வெண்மை நிறம் பெறுமாறு போல முத்தியடைந்த ஆன்மாக்களை சிவத்தினது அனுபவத்தைப் பெறும்.

## பயிற்சிகள்

1. அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் எது?
2. இறைவனின் இரு நிலைகளும் எவை?
3. ஐந்தொழில்களும் எவை?
4. இறைவனின் மூவகைத் திருமேனிகளும் எவை?
5. பசு என்பதன் பொருள் என்ன?
6. மூவகை ஆன்மாக்களும் எவை?
7. சதசத்து என்பதன் பொருள் என்ன?

## செயற்பாடு

பதி, பசு எனும் பகுதியிலுள்ள விடயங்களை திருவருட் பாடப்பகுதியோடு தொடர்புறுத்திப் பார்க்கவும்.

## பாடச்சுருக்கம்

- ★ உண்மைப் பொருள்கள் மூன்று: அவை பதி, பசு, பாசம் என்பனவாகும்.
- ★ பதிக்கு இருநிலைகள் உள்ளன. அவை சொரூபநிலை, தடத்தநிலை என்பனவாகும்.
- ★ தடத்தநிலையில் இறைவன் ஐந்தொழில்களைப் புரிகின்றார்
- ★ பதி அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளைப் பெறுகின்றார்
- ★ பதிக்கு எண் குணங்கள் காணப்படுகின்றன.
- ★ பாசத்தால் கட்டுண்டது ஆன்மா.
- ★ ஆன்மாக்கள் மூன்று வகைப்படும்